ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ரக்தாக்ஷி வரு-ஐப்பசிமீ பகுதி ய.

Vol. 1. October & November No. 10.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

காரப்பங்காடு,

(உபயவேதாந்த வித்வான் ஸ்ரீ சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.)

இனி பாரதத்துக்குப் பஞ்சரத்நமாகச் சொல்லப்பட்ட பகவத்கீதாதிகளில் நாராயணனே பரதத்வமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது நிற்க, "ஆலோட்ய ஸர்வ சாஸ்த்ராணி விசார்யச புந: புந: இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண:ஸதா" என்று சாந்தி பர்வத்தில் ஸ்ரீ பீஷ்மராலே மோக்ஷதர்மத்தில் தர்மபுத்ரருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம் ஸர்வ சாஸ்திரங்களையும் நன்ருக ஆராய்ந்து அடிக்கடி யுக்தி விசாரமும் பண்ணி நாராயணனே த்யேயமான பரதத்வமென்று தெளியப் பட்டதென்பதாம்.

இப்படியே ஸாத்விக புராணங்களிலும் தலையான விஷ்ணுபுராணத்தில், மைத்ரேயர், "யந்மயம்ச ஜகத்ஸர்வம்" என்று தொடங்கி, எவனிடத்தில் நின்றும் ஜகத்து உண்டாகிறதோ, எவனுல் ரக்ஷிக்கப்படுகிறதோ, எவனிடத்தில் ப்ரளயகாலத்தில் லயமடைகிறதோ அவனைச் சொல்லவேணுமென்று ஸ்ரீ பராசர பகவானைப் பொதுவாகக் கேட்க, புலஸ்தியருடைய வரப்ரஸாதத்தாலே தேவதா பாரமார்த்தியத்தை உள்ளபடி அறிந்தவராகச் சொல்லப்படுகிற ஸ்ரீ பராசர பகவான் "விஷ்ணு: ஸ்ஸகாசா துத்பூதம் ஜகத் தத்ரைவச ஸ்திதம் ஸ்திதி ஸம்யம கர்த்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்சஸ:" என்று விஷ்ணுவே ஜகத்தினுடைய ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணுகிறவர் என்று அறுதியிட்டிருக்கிறார். இங்கே, பொது க ப்ரஸ்நம் பண்ணியிருக்கச்செய்தே கோல் விழுக்காடாகவே ...த்தி விசேஷத்தைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறபடியால் இதுவே

உண்மையான பரதத்வ விசார நிச்சயமாமென் றறியத்தக்கது. இப்படியன்றிக்கே, கேட்போர், தமக்கு அபிமதமானதொரு வஸ் துவைப்பற்றிச் சிறப்பித்துக் கவிபாடித் தரச்சொல்லுவாரைப் போலே, ஒரு வ்யக்தியைக் குறித்துச்சொல்லி, அந்த வ்யக்திக்கு உத்கர்ஷத்தைச் சொல்லுகிற ஸம்ஹிதைகளைச் சொல்லவேணு மென்று கேட்க, அப்படியே அந்த வ்யக்திக்கு உத்கர்ஷத்தைச் சொல்லுகிற ராஜஸ தாமஸ புராணங்கள் ப்ரஸ்துத ப்ரஸம்ஸாபர மாகையால் பரதத்வ நிச்சய விஷயத்தில் ப்ரமாணமாகமாட்டா தென்பதும், கீழே சொல்லிய விஷயங்களை விரோதிக்கமாட்டா தென்பதும் அறியத்தக்கது.

இப்படியே, பாஞ்சராத்ரத்திலும், நாராயணனே பரதத்வ மென்று சொல்லி, அந்த நாராயணனுடைய ஆராதனார்த்தமாகவே ஆலய நிர்மாணம், ப்ரதிஷ்டை, பூஜாவிதி, உத்ஸவாதிகள் இவற்றை விசேஷித்துச் சொல்லியிருப்பதாலும் ஸ்பஷ்டமா யறியலாம்.

ஸ்ரீ பாஞ்சராத்ரம் மற்ற ஆகமங்கள்போலன்றியே முக்கிய மான ப்ரமாண சாஸ்திரமென்று முன்னமே நிரூபிக்கப்பட்டது. அன்றியும் ஸூத்ரகாரரான வ்யாஸரே சாந்திபர்வத்தில் பாஞ்ச ராத்ர ப்ராமாண்யத்தை பஹுமுகமாக உபபாதித்திருக்கிறார்.

இனி, மத்யஸ்தரான ஸம்ஸ்கிருத கவிகளில் சிறந்த காளிதாஸ மஹாகவியும், ரகுவம்சம் பதின்மூன்றும் ஸர்க்கத்தில், "தாம்தாம வஸ்தாம் ப்ரதிபத்யமாநம்'' என்கிற சுலோகத்திலும், "நாபிப்ர ரூடாம் புருஹா ஸநே" என்கிற சுலோகத்திலும், "விஷ்வக்ஸேந ஸ்வதநு மவிசத் ஸர்வலோக ப்ரதிஷ்டாம்'' என்கிற சுலோகத்திலும், நாராயணனே பரதத்வமென்று நிரூபித்திருக்கிறார். இந்த சுலோ கங்கள் ராவணவதாநந்தரம் பிராட்டியைக் குறித்து சக்ரவர்த்தித் திருமகன் சொல்லுகிற வார்த்தைகளாம். இவற்றின் அர்த்தம்.— இந்த ஸமுத்ரமானது தன்னுடைய பெருமையாலே விஷ்ணுவி னுடைய ரூபம்போலே இப்படிப்பட்டதென்றும், இவ்வளவுடைய தென்றும் அறியமுடியாதபடி பலபடியாக எங்கும் வியாபித்திருக் கிறது என்பதும், ஸமுத்ரத்தில், தன்னுடைய நாபியிலுண்டா ப்ருஹ்மாவாலே ஸ்தோத்ரம் பண்ணப்படுமவராய்க்கொண்டு, பு

ஞன நாராயணன் லோகங்களை ஸம்ஹரித்து சயனித்திருக்கிறார் என்பதும், விஷ்வக்ஸேநநான நாராயணன் ஸமஸ்த லோகங்களுக்கும் ஆதாரமான தன்னுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தில் அந்தர்ப்பவித்தான் என்பதுமாம்.

இனி, மாககவியும், "ஸ்ரீய: பதி: ஸ்ரீ மதிசாஸிதும் ஜகத் ஜகந்நிவாஸ:" என்பதால் ஸ்ரீய: பதியான நாராயணனே ஜகத்துக்கெல்லாம் ஆதாரனென்றும், ஜகத்ரக்ஷகனென்றும் சொல்லியிருக்கிறார். இன்னும் மூன்றாவது ஸர்க்கத்திலும், "ப்ரஜா இவாங்கா தரவிந்த நாபே:" என்பதால் பத்மநாபநான நாராயணனுடைய அங்கத்தில் நின்றும் ப்ரஜைகள் வெளிப்பட்டாற்போலே த்வாரகையில் நின்றும் சைந்யங்கள் வெளிப்பட்டதென்று திருஷ்டாந்தம் காட்டியிருக்கிறார்.

இனி, நைஷத காவ்யத்தில் ஸ்ரீ ஹர்ஷகவியும், "அதிகத்ய ஜகத்ய தீச்வராத்" என்கிற சுலோகத்தில், புருஷோத்தமனான நாராயணனே மோக்ஷப்ரதனென்றும், "ஸ்ரீயஸ் ததாலிங்கனபூ:" என்கிற சுலோகத்தில் நாராயணன் ஸமஸ்தமான ஜீவர்களுக்கும் அந்தர்யாமியா யிருக்கிறானென்றும் சொல்லியிருக்கிறார்.

இப்படியே த்ராவிட கவிகளிலும் சிறப்புற்ற கம்பநாடர் விராதவதப் பட்டலத்தில் "வேதங்களறைகின்ற" என்கிற பாட்டு முதல், "ஒப்பிறையும் பெறலரிய" என்கிற பாட்டுவரை சக்ரவர்த்தி திருமகனா யவதரித்த நாராயணனே பரதத்வமென்பதை வெளியிட்டிருக்கிறார்.

அப்படியே கபந்தவதைப் படலத்திலும், "விண்ணினின்றவன்" என்ற பாட்டுத்தொடங்கி, "மாயப்பிறவி மயல்நீக்கி" என்கிற பாட்டுவரையில் இந்த விஷயத்தை வ்யக்தமாகச் சொல்லியிருக்கிறார்; இப்படியே இன்னும் பலவிடங்களிலும் இந்த விஷயத்தை நிரூபித்திருக்கிறார். அவைகளையும் கண்டுகொள்ளலாம்.

இன்னும் இதற்கநுகுணமான உபபத்திகளும் சில உண்டு. ஸர்வரும் அக்ஷராரம்ப காலத்தில் அஷ்டாக்ஷரத்தை முன்னிட்டுச் சொல்லுகையும், ஸந்தியாவந்தன முதலான நித்ய கர்மாநுஷ்டானங்களில் அச்யுதாநந்த கோவிந்தாதி மந்த்ரங்களை யநுஸந்திப்பதும் கண்டுகொள்ளலாம். இப்படியாக நாராயணனே பரதத்வமென்பது நிரூபிக்கப்பட்டது.

அந்த நாராயணன் ஸ்ரீய: பதியென்பது “ஹ்ரீ:ச்சதே லக்ஷ்மீ: ச பத்ந்யௌ” என்கிற சுருதியால் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸ்ரீ சப்தத்தாற் சொல்லப்பட்ட லக்ஷ்மியும் ஈசுவர தத்வத்தில் அந்தர்பூதை யென்றும், அவளுக்கு ஜகத்காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், உபாஸ்யத்வம், ஸர்வாந்தர்யாமித்வம் இவைகளுண்டென்றும், வடவாரியர்கள் நிரூபித்திருக்கிறார்கள். தென்னாசாரியர்கள் ஸம்ப்ரதாயத்தில், அவள் சேதனகோடியிலே அந்தர்பூதை யென்றும், ஈசுவரன் ஜகத்காரணமாமிடத்தில் இவள் ஸஹசாரிணியாயிருப்பள் என்றும், மோக்ஷப்ரதாந விஷயத்தில் புருஷகார பூதையாயிருப்பள் என்றும் சொல்லுவர்கள். இதில் தென்னாசாரிய ஸம்ப்ரதாயஸ்தர் சொல்லும் விஷயங்களுக்கு உபபத்திகளும் இவையென்று அறிந்துகொள்ளும்படி இங்கு விவரிக்கப்படுகிறன.

“காரணந்துத்யேய:” என்பதுகொண்டு ஜகத்காரணவஸ்துவே த்யேயம் என்றும், அந்த ஜகத்காரணவஸ்துவும் ப்ருஹ்ம சப்த வாச்யமென்றும், அந்த ப்ருஹ்மசப்த வாச்யம் புருஷோத்தமனென்றும், அவனே மோக்ஷப்ரதனென்றும், சுருதிகளால் ஸ்ரீபாஷ்யத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஆக ஜகத்காரணத்வம், ப்ருஹ்மசப்தவாச்யத்வம், மோக்ஷப்ரதத்வம் இவைகள் ஒன்றைவிட்டொன்று பிரியாதவைகளாம். அவற்றுள் ஜகத்காரணத்வம் உபாதாந நிமித்த ஸஹகாரி காரணத்வ ரூபமாக மூன்று வகையாயிருக்கும். இவற்றுள் ஈசுவரன் உபாதாநகாரணமா யிருக்கையாவது ஸூக்ஷ்மாவஸ்தங்களான சேதனாசேதனங்களை சரீரமாகவுடைய ஸர்வேசுவரன் தானே, ஸ்தூலாவஸ்தங்களான சேதனாசேதனங்களை சரீரமாக வுடையவனாயிருக்கை. ஆகையாலே கார்யரூபமாகவுமிருக்கும் உபாதனமாகிறான். புதிதாகத் தோன்றத்தக்கதாயும், தன்னைவிட்டுப் பிரியாததாயுமிருக்கிற தர்மமாகிய அவஸ்தையை யுடைத்தாயிருப்பது உபாதாநமாகையால் இந்த அவஸ்தைகள் சரீரங்களான சேதனாசேதனங்களின் வழியாக ஈசுவரனுக்கு வருவதால் உபாதாநத்வமும் கூடுகிறது.

இப்படியிருந்துள்ள உபாதாநத்வம் லக்ஷ்மிக்கு இல்லை; என்பதை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் “ப்ரளயஸமய ஸூப்தம்” என்கிற சுலோகத்தில் வெளியிட்டிருக்கிறார். அந்த சுலோகம்—.

"ப்ரளயஸமய ஸுப்தம் ஸ்வம் சரீரைகதேசம்
வரத சிதசிதாக்யம் ஸ்வேச்சயா விஸ்த்ருணு:
கசிதமிவ கலாபம் சித்ர மாதத்ய தூங்வர்
அநுசிகிநி சிகீவக்ரீடஸி ஸ்ரீஸமக்ஷம்." என்பதாம்.

(இதன் அர்த்தம்) ப்ரளய காலத்தில் தன்னுடைய சரீரத்தின் ஏக தேசமா யுள்ளொடுங்கியிருந்த சேதநாசேதனங்களை ஸ்வேச்சை யாலே விஸ்தரித்துக்கொண்டு, ஆண்மயிலானது தன்னுளொடுங்கிய தோகையை விரித்துக்கொண்டு பெண்மயிலின் முன்னே விளையாடு வதுபோல லக்ஷ்மியினுடைய சன்னிதியில் விளையாடுகிறீர். என் பதாம்.

இதனால் ஈசுவரனுக்கே சேதனா சேதனங்கள் சரீரமென்றும் லக்ஷ்மிக்கு சேதனா சேதனங்கள் சரீரமன்றென்றும் த்ருஷ்டாந்த ஸ்வாரஸ்யத்தால் வ்யக்தமாயிற்று. ஆண்மயிலுக்கே தோகை யிருப்பதும், பெண்மயிலுக்குத் தோகையில்லாமையும் ப்ரத்யக்ஷமா யறியலாம்.

நிமித்த காரணத்வமும், "யஸ்யா வீக்ஷ்யமுகம் ததிங்கித பராதீநோ விதத்தேகிலம்" என்கிற ஆழ்வான் ஸ்ரீஸூக்தியிலும், "ஸ்ரீயை ஸமஸ்த சிதசித் விதாநவ்யஸநம் ஹரே: அங்கீகாரிபி ராலோகை: ஸாதயந்த்யை க்ருதோஞ்ஜலி:" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியிலும் இவளுடைய இங்கித பராதீனனாய்க்கொண்டு ஈசுவரனே ஜகத் சிருஷ்டியைப் பண்ணுகிறானென்று சொல்லப்படுவதால் இவளுக் கில்லையென் றேற்படுகிறது.

மேலும் அஜ்ஞாதநிக்ரஹையாலே நிக்ரஹ கார்யமாகிய நாரகிய சரீர சிருஷ்டியில் கர்த்ருத்வம் கூடாததாயிற்று. இந்த விஷயத்தை ந்யாயஸித்தாஞ்ஜந வ்யாக்யாநத்தில் திருப்புட்குழி ஸ்வாமி வெளியிட்டிருக்கிறார். அப்படியே மோக்ஷப்ரதத்வமும் சேதனன் பண்ணின அபராதங்களாலுண்டான நிக்ரஹத்தை அவனுடைய உபாஸநத்தால் போக்கி மோக்ஷத்தைக் கொடுக்கையாகையாலே அந்த அபராததாலுண்டான நிக்ரஹம் லக்ஷ்மிக்குக் கீழ்ச்சொன்ன ஹேதுவாலே ஸம்பவிக்கிறதில்லை.

மேலும் சேதனன் பண்ணுகிற உபாயாநுஷ்டானம் நிக்ரஹ நிவ்ருத்திக்குமட்டும் ஸாதநமாவதல்லது ஸ்வாபாவிக ஜ்ஞானவி

காலரூபமான மோக்ஷத்துக்கு ஸாதநமல்லாமையாலே உபாஸ்யத்வமும் ஸம்பவியாது. இதற்கு அநுபந்தமுள்ள ப்ருஹ்மசப்த வாச்யத்வமும், "ப்ருஹ்மசப்தோ புருஷோத்தமோபிதீயதே" என்கிற ஸ்ரீபாஷ்ய ஸூக்தியால் புருஷோத்தமனான நாராயணனுக்கேயுள்ளதாவதன்றி, நாரீணுமுத்தமையான லக்ஷ்மிக்குக் கூடாதென்பது ஸ்பஷ்டமாம்.

இந்த விஷயத்தை தத்வடீகையில் "ப்ருஹ்மணி ஸ்ரீநிவாஸே" என்பதன் வ்யாக்யாநாவஸரத்தில் "ப்ருஹ்மணீதி லக்ஷ்ம்ய நிர்தேச:" என்கிற வாக்கியத்தால் ப்ருஹ்மசப்த வாச்யத்வம் லக்ஷ்மிக்கு இல்லையென்பதை தேசிகன் ஸாதித்திருக்கிறார். இப்படியே ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜனத்திலும், ந்யாய ஸித்தாஞ்ஜன வ்யாக்யானத்திலும் வ்யக்தமாகக் காணலாம்,

இனி ஸர்வாந்தர்யாமித்வமும் 'யதாஸர்வ கதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம" என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண சுலோக வ்யாக்யாநாவஸரத்தில் எங்களாழ்வான் "இயம்சசத்திவசாத்" என்றும், ஸ்வரூபதோ வ்யாப்தியில்லை யென்றும் ஸாதித்திருப்பதால் ஸ்வரூபத்தாலே ஸம்பவிக்கமாட்டா தென்பதாம்.

மேலும் ஒருவனே ஜகத்துக்குக் காரணம்; அவன் நிஸ்ஸமாப்யதிகன்; என்று சுருதி சொல்லியிருப்பதால், லக்ஷ்மிக்கு பரத்வம் சொல்லுகிற பக்ஷத்தில் ஈசுவரனுக்கு ஏகத்வம் ஸம்பவியாது; ஈசுவரத்வித்வம் ஏற்படும். ஈசுவரத்வித்வம் அநுபபந்நமாகையால் இவளும் சேதனகோடியில் சேர்ந்தவளாம்.

இவளுக்கு புருஷகாரத்வம் அஸாதாரணதர்மம். புருஷகாரத்வமாவது.- ஸர்வேசுவரன் சேதனனுடைய அபராதத்தால் சீற்றம் கொண்டு சேதனனைநிக்ரஹிக்கும் காலத்தில் இவள் தன்னுடைய லாலப்யத்தாலே நிக்ரஹத்தைப்போக்கி அவன் திருவுள்ளமுகந்து சேதனனையங்கீகரித்தருளும்படி பண்ணுகை. ஈசுவரனுக்கு சேதனனுடைய அபராததர்சனத்தாலே அபிபூதங்களான க்ஷமாவாத்ஸல்யங்களை உத்புத்தமாக்குகை புருஷகார கிருத்யம். இப்படியுள்ள புருஷகாரத்வம் ப்ரபத்திவித்யையில்மட்டும்உண்டு. பக்திஸ்தலத்தில் அந்தநிக்ரஹ நிவிர்த்திக்குபக்தியே ஸாதனமாகையால் அங்கு புருஷகாராபேக்ஷையில்லை. ப்ராப்திதசையில், இருவருமான

சேர்த்தியில் கைங்கர்யம் ரஸிக்குமாகையால் கைங்கர்யப்ரதிஸம்பந்தித்வரூபமான சேஷித்வம் இருவரிடத்திலும் வ்யாப்தமாயிருக்கும். இவ்விஷயத்தை, "உபயாதிஷ்டானஞ்சைகத்வம்" என்கிற பூர்வாசாரியர்கள் வாக்கியத்தாற் கண்டுகொள்வது.

இப்படியன்றிக்கே ஈசுவரத்வம், காரணத்வம் முதலானவைகள் உபயவ்யாப்தங்கள் என்று சொல்லும்பக்ஷத்தில், ஈசுவரனுக்கு தனித்து ஈசுவரத்வாதிகளில்லை. அப்படியே லக்ஷ்மிக்கும் இல்லை. 'த்வைராஜ்யஸ்ய ஈசுவராபிமதத்வாந் நதோஷ:' என்கிற கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகாவாக்கியத்துக்கு வ்யாப்தமென்று சொல்லுவது விருத்தம்

இப்படி உபாயாநுஷ்டான தசையில் புருஷகாரபூதையாயும் ப்ராப்திதசையில் ப்ராப்யையாயும் இருக்கும் என்கிற விஷயத்தை, பட்டர், அஷ்டசுலோகியில்,

"ஈசாநாம் ஜகதாமதீச தயிதாம் நித்யாநபாயாம் ஸ்ரீயம், ஸம்ச்ரித்யாச்ரயணோசிதா கிலகுணஸ்யாங்க்ரீஹரே ராச்ரயே, இஷ்டோபாயதயா ஸ்ரீயாசஸஹிதா யாத்மேச்வரா யார்த்தயே, கர்த்தும்தாஸ்ய மசேஷமப்ரதிஹதம் நித்யந்த்வஹம் நிர்மம:"

என்கிற சுலோகத்தால், ஸர்வேசுவரனுக்கு தயிதையாயும், அத்தால் வந்த ஈசுவரத்வத்தையுடையளாயுமிருக்கிற லக்ஷ்மியை புருஷகாரமாக ஆச்ரயித்துஈசுவரனுடைய திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன். அப்படியிருந்துள்ள லக்ஷ்மியோடேகூடின ஸர்வேசுவரன் விஷயத்தில் ஸமஸ்தகைங்கர்யங்களும் செய்யக்கடவேன் என்று ஸாதித்தருளினர்.

த்வயத்தின்பூர்வகண்டத்தில் "ஸ்ரீமந்நாராயணசரணௌசரணம்" என்னுமிடத்தில் சரணசப்தார்த்தம் விசேஷணமான திருவடியில் அந்வயிப்பதுபோல் விசேஷணமாயுள்ள லக்ஷ்மியிடத்திலும் அந்வயிக்கும் என்பது அபாதிதமாயிருந்தால் பொருந்தும். கீழேசொல்லியபடி உபாயத்வாதிகள் பாதிதங்களாகையால் இங்கேபொருந்தாது. அதுஎப்படியென்றால், குடம்ப்ரமேயம் என்னுமிடத்தில் விசேஷணமானப்ரமேயத்வம் குடத்துக்கு விசேஷணமானகுடத்திலும் அந்வயிப்பதுபோல, குடம் த்ரவ்யம் என்னுமிடத்தில் விசேஷணமானத்ரவ்யத்வம் குடத்துக்கு விசேஷணமான குடத்வத்தில்,

எப்படி அந்வயிக்க மாட்டாதோ அப்படியே இங்கும் அந்வயிக்க மாட்டாதிருக்கிறது.

ஈசுவரனுக்கு, திவ்யமங்கள விக்ரஹங்களும் குணங்களும் விசேஷணமாயிருந்தபோதிலும் உபாயமாகாமல் ஆசிருதகார்ய பாதங்களையும், ஆச்ரயண ஸௌகர்ய பாதகங்களையும், ஆசிரயண ருசி ஜனகங்களையும் ஏற்படுகின்றனபோல, பிராட்டியும் தனக்கு அஸாதாரண தர்மமாக ஏற்பட்ட புருஷகாரத்வத்தை அடைந்தவளாய்க்கொண்டு விசேஷணமாக அந்வயிக்கலாம். இப்படியாக பிராட்டி உபாயமாகாமல் புருஷகாரமாகிறபடியால் அநந்யோபாயத்வத்துக்கு விரோதம் வாராது. இப்படியிருக்கும் பக்ஷத்தில் ப்ராப்தி தசையில் பிராட்டி ப்ராப்யையாயிருப்பள் என்று சொல்லுவதால் அநந்யோபோயத்வத்துக்கு விரோதம் வாராதோ வென்னில், ப்ராப்திக்கு உத்தேச்யமாயிருக்கையாகிய உபேயத்வம் ஈசுவரனுக்கே யுள்ளது; பிராட்டிக்கு இல்லை: ஆதலால் அநந்யோபேயத்வத்துக்கு விரோதமில்லை.

ஆனால் த்வயத்தில் உத்தரகண்டத்தில் சொல்லுகிற ப்ராப்யத்வம் இவன் பண்ணுகிற கிங்கர வ்ருத்திக்கு உத்தேச்யமாயிருக்கையாலே அப்படியுள்ள ப்ராப்யத்வம் பிராட்டிக்கு உண்டு. எப்படியென்றால், சித்ரகூடத்தில் "பவாந்ஸ்துஸஹவைதேஹ்யா" என்கிற சுலோகத்தின்படி, இருவருமான சேர்த்தியிலே செய்கிற கிங்கர வ்ருத்தி ரஸிப்பதுபோலே, பிராட்டியை விட்டுப்பிரிந்து பம்பா பரிஸரத்தில் செய்கிற கிங்கர வ்ருத்தி ரஸிக்கமாட்டாதன்றே! கிங்கர வ்ருத்திக்கு உத்தேச்யமாயிருக்கையாகிற ப்ராப்யத்வம் பிராட்டிக்கு உபபந்நமே. இந்த விஷயம் லோகத்திலும் கண்டுகொள்ளலாம்.

ஒரு பர்த்ரு பார்யா விஷயத்தில் கிங்கர வ்ருத்தி செய்கிற அடிமையாளனுக்கு ப்ரதானனான உத்தேச்யன் பர்த்தாவாயிருந்தபோதிலும் கிங்கர வ்ருத்தி செய்வது இருவருக்குமே ஆவதுபோலே இதுவும் உபபந்நம். இந்த விஷயத்தை லோகதேசிகன் முமுக்ஷுப்படியில், "ஒருவன் ஆவணவோலை யெழுதும்போது க்ரஹணிக்கென்றன்றே எழுதுவது ஆகிலும் பணிசெய்வது க்ரஹணிக்கிறே" என்றருளிச்செய்திருக்கிறார்.

இப்படியிருப்பதால், ஸ்ரீ பாகவதத்தில், நாலாவது ஸ்கந்தத்தில் ப்ருதுசக்ரவர்த்தி, "அப்யாவயோரேக பதி:" என்கிற சுலோகத்தில், தன்னோடுகூட பிராட்டியையும் சேர்த்து இருவர்க்கும் ஈசுவரனேபதி என்று சொல்லியிருக்கிறார். இந்த விஷயங்களை அநுஸரித்து பத்தாவது ஸ்கந்தத்தில், ருக்மணிக்கும் க்ருஷ்ணனுக்கும் நடந்த நர்மோக்தி ஸமயத்தில், "காஹம் குணப்ரக்திரஜ்ஞ க்ருஹீதபாதா" என்ற ருக்மணீ வாக்கியமான சுலோகத்துக்குவ்யாக்யானம் பண்ணின வீரராகவாசார்யர், ஜ்ஞானமில்லாதவர்கள் என்னை ஸ்வந்தரையாகவும், உபாயமாகவும் ஆச்ரயிக்கிறார்கள். ஜ்ஞானமுள்ளவர்கள் புருஷகாரமாகவே பற்றுகிறார்கள் என்று ஸாதித்திருக்கிறார். இவர் வடவாரியர்களில் ஒருவரென்பது வ்யக்தம்.

ஆனால், லக்ஷ்மீதந்த்ரம் முதலான ஸம்ஹிதைகளில் பிராட்டியை ஜகத்காரணமாகவும், மோக்ஷப்ரதையாகவும் சொல்லுகிற விஷயங்கள், "ஏகாத்விச்சாத்மிகா சக்திஸ் ஸர்வலோககுடும்பினீ" என்கிற சுலோகத்தின்படி ஈசுவரனுடைய இச்சைக்கு அபிமானி தேவதையாயிருக்கையாலும், ஈசுவரனோடு தனக்குண்டான ஐகாஸ்யத்தாலும் உபபந்நம். அஹிர்ப்புத்ந்ய ஸம்ஹிதையில் ஈசுவரனுடைய ஸங்கல்பத்துக்கு அபிமானி தேவதையாகச் சொல்லப்பட்ட ஸுதர்சனாழ்வானுக்கு ஜகத்காரணத்வம் முதலானவைகள் போலே இதுவும்கூடும்

இப்படியிருக்க, தேசிகன், பிராட்டிக்கு உபாயத்வம், மோக்ஷப்ரதத்வம் முதலியவற்றை ரஹஸ்யத்ரயஸார முதலான க்ரந்தங்களில் அருளிச்செய்திருப்பது கூடும்படி எங்கனே என்னில்?' சது:சுலோகி வியாக்யானத்தில் "பஞ்சஸ்வேதேஷு பக்ஷேஷு க:சிதேப்ரமாணவாந்" என்று கீழ் நிரூபித்த பக்ஷத்தையும் அங்கீகரித்தருளியிருப்பதால் உபபந்நமாம். அஹோபில மடாதிபதியான ஒரு ஸ்வாமி 'புருஷகாரமீமாம்ஸம்' என்கிற க்ரந்தத்தில் தேசிகன் திருவுள்ளம், பிராட்டிக்கு புருஷகாரத்வமேயுள்ளது; உபாயத்வமில்லை, என்பதுதான் உண்மையாயுள்ளதென்பதை தேசிகனுடைய ஸூக்திகளைக்கொண்டே நிரூபித்திருக்கிறார். ஆனாலும் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸ்பஷ்டமாகப்பிராட்டிக்கு உபாயத்வம் முதலானவைகளுண்டு என்று உபபாதித்திருப்பதற்கு மூலம், இப்படியும் ஒரு நிர்வாஹமிருக்கலாம் என்கிற திருவுள்ளமே,

தென்னுசார்ய ஸம்ப்ரதாயத்தில் ஏற்பட்ட இந்த விஷயத்துக்கு உபபத்தியைமட்டும் நிரூபித்ததே யொழிய, மற்ற ஸம்ப்ரதாயவிஷயத்தில் தோஷோத்காடனம் பண்ணவரவில்லை. ஸர்வஜ்ஞர்களான ஆசார்யர்களுடைய திருவுள்ளத்தில் அநேக நிர்வாஹ பேதங்கள் தோற்றியிருக்கலாம். கிஞ்சித்ஜ்ஞனான அடியேன் இந்த விஷயத்தை ப்ரஸ்தாபிக்க அர்ஹனல்லன். இந்த ஸம்ப்ரதாயத்தில் ஏற்பட்ட அர்த்தங்கள் ஸமீசீனங்களல்லவென்று சிலர் நினைக்கவுங்கூடும். அந்தவிஷயத்தை மாற்றவேண்டியதற்காகவே இவ்வளவு நிரூபிக்கும்படி நேர்ந்தது.

இனி அந்த ஸம்ப்ரதாயத்திலும் இந்த விஷயத்தில் சில உபபத்திகள் யதாமதி நிரூபிக்கப்படும். அதாவது, சுருதியில் ஸ்ரீ ஸூக்தத்தில் மோக்ஷப்ரதத்வம் லக்ஷ்மிக்கு உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. திருவாய்மொழியில் "வேரி மாருதபூ மேலிருப்பாள் வினைதீர்க்குமே." "பண்டைநாளாலே நின்றிருவருளும் பங்கயத்தாள் திருவருளும்கோண்டு," என்கிற ஸூக்திகளால் பிராட்டிக்கு மோக்ஷப்ரதத்வமுண்டென்று தெரிகிறது. ஈசுவர த்வித்வ தோஷபரிகாரமும், ஈசுவரனுக்குத்தான் பரதந்த்ரையாயிருந்து கொண்டே ஈசுவரகிருத்யத்தை நிர்வஹிப்பதால் ஏற்படுகிறது. ஈசுவரனையே சொல்லுகிற ப்ரகரணங்களிலும் இவள் ஈசுவரனுக்கு ஸ்வரூபநிரூபகையாயிருப்பதால் இவளையும் சொல்லியதாகக் கொள்ளலாம். காரணத்வம், உபாயத்வம் முதலானவைகள் இருவரிடத்திலும் பர்யாப்தங்களென்று அவர்களில் சில ஆசார்யருடைய அபிப்பிராயம். பிராட்டிக்கு ப்ருஹ்ம சப்தவாச் யத்வமுண்டென்பதும் சிலரபிப்பிராயம். அங்ஙனன்றிக்கே காரணத்வ முதலானவைகள் விசிஷ்டநிஷ்டமென்பர். விசிஷ்டமாவது விசேஷண விசேஷ்யங்களைக் காட்டிலும் வேறுபட்டதாகாது. ஆகையால் விசேஷணமான பிராட்டிக்கும் காரணத்வம் முதலானவை உண்டென்பது சிலர் அபிப்பிராயம். காரணத்வம், ஸ்வரூப யோக்யதாரூபமாயும், பலோபாதாநரூபமாயுமிருக்கும். அல்லது "பதிமந்த்ர வோசரம்" என்கிற தேசிகன் ஸூக்திப்படி பிராட்டிக்கு காரணத்வமில்லையென்பது சிலரபிப்பிராயம். யதாஸம்ப்ரதாயம் கண்டுகொள்வது. இன்னும் இந்த விஷயத்தில் நிரூபிக்கவேண்டிய விஷயங்கள் பலவுண்டு; அவற்றை யெல்லாம் விஸ்தரபயத்தால் நிறுத்திவிட்டேன். இனி ஈசுவரகுணங்கள் நிரூபிக்கப்படும். (தொடரும்)

ஸ்ரீ:

ஒரு ஸம்சயம்.

உபயவேதாந்த ப்ரவர்த்தகரான ஸ்ரீ சிங்கப்பெருமாள் ஸ்வாமி மிகவும் அற்புதமாக எழுதியருளும் ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை யென்னும் திவ்ய க்ரந்தத்தில்- [ஆடிமாதத்தில் வெளிவந்த ஏழாவது பகுதியின் 166-வது பக்கத்தில்] " 'ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரே: விதுரஸ் ஸமஹாமதி:' என்கிற சுலோகத்தின்படி மஹாமதியான விதுரர் தன்னுடைய க்ருஹத்தில் தான் போட்ட ஆஸநத்தில் தான் துர்யோதந ஸஹவாசத்தால் போடப்பட்ட பொய்யாஸந மென்கிற கலக்கமுண்டாகி ஆஸனத்தைத் தடவிப் பார்த்தார் என்று சொல்லுகையாலும்" என்கிற ஸ்ரீ ஸூக்தி மாலையை ஸேவித்தவுடனே அடியேனுக்கு நெடுநாளாயிருந்த தொரு ஸம்சயம் நினைவுக்கு வந்தது. விதுரர் தாம் விரித்த ஆஸனத்தைத் தாமே தடவிப்பார்த்தார் என்கிற கதையும் இதற்கு உபஷ்டம்பகமாகச் சொல்லப்படுகிற 'ஸம்ஸ்ப்ருசந்' இத்யாதி மஹாபாரத ச்லோகமும் நமது பூர்வாசார்யர்களின் திவ்ய க்ரந்தங்களிலும் பலவிடங்களில் உதாஹரிக்கப்பட்டுள்ளன. திருவாய்மொழியின் ஈடுமுப்பத்தாறுயிரப்படியிலும் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த திருப்பாவை ஆறுயிரப்படியிலும், ஜநந்யாசார்யரும் மணவாள மாமுனிகளும் அருளிச்செய்த ஸ்ரீவசநபூஷண வியாக்கியானங்களிலும் இந்த இதிஹாஸம் இங்ஙனமே யருளிச்செய்யப்பட்டுள்ளது. "ஸம்ஸ்ப்ருசந்" இத்யாதி ச்லோகமும் காட்டப்பட்டுள்ளது. அந்த ச்லோகம் ஸ்ரீ மஹாபாரதத்தில் உத்யோக பர்வத்தின் உள்ளீடான பகவத்யாந பர்வத்தில் தொண்ணூற்றுநான்காமத்தியாயத்தில் அறுபத்துமூன்றுவது ச்லோகமாக இக்காலத்திய அச்சுப் புத்தகத்தில் காண்கிறது. "ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரேர் மஹாமதிருபாவிசத்" என்று மூலத்தில் பாடம் காண்கிறது. "...........விதுரஸ் ஸமஹாமதி:" என்று நம் ஆசார்யர்கள் உதாஹரித்துளர்'; ஜநந்யாசார்யர் மாத்திரம் "மஹாமதிருபாவிசத்" என்றே பாடம் காட்டியிருக்கிறார். இப் பாடபேதம் ஒரு பெரிதான விஷயமல்ல; எவ்வாறாயினுமாயிடுக. இந்த ச்லோகத்திற்கு நம்மவர்கள் அருளிச் செய்துள்ள பொருள் ப்ரகரணத்திற்குப் பொருந்தாததுபோல் தோன்றுகிறது. விதுரர் தமது திருமாளிகை

யிலே தாமிட்ட ஆஸனத்தைத் தடவிப்பார்த்ததாகவன்றோ நம்மவர்கள் பொருள் அருளிச்செய்திருப்பது; மூலத்தில் இந்த ச்லோகம் எந்த ப்ரகரணத்தில் இராநின்றதென்றால், விதுரர் திருமாளிகையினின்றும் கண்ணபிரான் துரியோதநனது ஸபா மண்டபத்திற்கு எழுந்தருளினபிறகு அங்கு து:சாஸநன், ஸாத்யகி, கர்ணன், சகுநி, துரியோதநன், கண்ணன், விதுரர் முதலானோர் வீற்றிருக்குமாற்றைக் கூறும் ப்ரகரணத்திலுள்ளது. விதுரர் திருமாளிகை விருத்தாந்தம் தொண்ணூற்றோராவது அத்யாயத்திற் கூறப்பட்டுளது. அந்த ப்ரகரணத்தில் இந்த ச்லோகம் காணப்படவில்லை. துர்யோதந ஸபையில் நடந்த செய்தியைக் கூறுமிடத்துள்ள ச்லோகத்தை மேற்கொண்டு அங்ஙனே பொருள் கூறுதல் எங்ஙனே பொருந்தும்? விதுரர் கண்ணபிரானுக்கு அந்தரங்க பக்தராதலால் அப்பிரானுடைய ஆஸநத்தைத் தொட்டுக்கொண்டு மிகவும் ஸமீபஸ்தராய் உட்கார்ந்தார் என்று தான் ப்ரகரணத்திற்குச் சேரப் பொருள் சொல்லத்தக்கதாகத் தோற்றுகின்றது. விதுரர் தமது திருமாளிகையில் கண்ணபிரானுக்கு ஆஸனமிட்டதாகவாவது தாமும் ஆஸனத்திலே உட்கார்ந்ததாகவாவது மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கவில்லை. இப்படியிருக்க, நம் ஆசாரியர்கள் "ஸம்ஸ்ப்ருசந்" இத்யாதி ச்லோகத்திற்கு வேறுவகையாகப் பொருள் அருளிச்செய்தது என்னே! என்று அடியேனுடைய நெஞ்சம் சங்காகளங்கிதமா யிராநின்றது.

இதற்கு இங்ஙனே சிலர் விடையளிக்கக்கூடும்: இதிஹாஸ புராணங்களெல்லாம் இக்காலத்தில் பலவகையாக விகாரப்பட்டிருப்பதால் இந்த ச்லோகம் மஹாபாரதத்தில் இடம்மாறி அச்சிடப்பெற்றிருக்கலாம்; அச்சுப் புத்தகத்தையே ஆதாரமாகக் கொண்டு பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் அதிசங்கை கொள்ளவொண்ணாதென்பர் —

இதிஹாஸ புராணங்களுக்கு ஆசார்யர்களின் காலத்திலிருந்த ஸந்நிவேசமும் இப்போதைய ஸந்நிவேசமும் மிகவும் மாறுபாடுற்றிருக்கின்றதென்பது ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம்; அத்யாய க்ரமத்திலும் ச்லோகங்களின் ஆநுபூர்வியிலும் பாட ப்ரக்ரியைகளிலும் வாசாமகோசரமான வைபரீத்யங்கள் ஏற்பட்டிருக்கின்றமையை அடியேன் குவாலாக அறிந்துளேன்; அதில் எள்ளளவும்

303

விஸம்வாதமில்லை. "ஸம்ஸ்ப்ருசந்" இத்யாதி ச்லோகத்திற்கு நம் ஆசாரியர்கள் அருளிச்செய்த அர்த்தம் நன்கு பொருந்துமாறு அந்த ச்லோகம் எந்த ப்ரகரணத்தில் இருக்கவேண்டுமோ அந்த ப்ரகரணத்தில்தானே அந்த ச்லோகம் அமையப்பெற்ற மஹாபாரத ஸ்ரீகோசம் யாரிடத்திலாவது கிடைக்கக்கூடுமோ? ப்ராசீந தாள கோசங்களைச் சேமித்து வைத்திருப்பவர் பலருண்டே. அவற்றில் இந்த ச்லோகம் க்ரமமான ஸ்தானத்தில் அமைந்திருக்கின்றதா வென்பதை யாரானுமொரு மஹாநுபாவர் பரிச்ரமப்பட்டுக் கண்டறிந்து வெளியிடுவரேல் *தலையல்லால் கைம்மாறிலேன்.

இந்த ப்ரஸக்தியிலே மற்றொரு விஷயமும் காட்டப்படுகின்றது: ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில் இருபத்தைந்தா மதிகாரமான ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்தில் "'விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்திச' என்றிதைக் கேட்டு துர்யோதநன் 'பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந!, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷல போஜநம்? என்று கேட்க; 'த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத், பாண்டவாந் த்விஷஸே ராஜந்! மமப்ராணாஹி பாண்டவா:' என்று உத்தரமருளிச் செய்கையாலே......" என்கிற வாக்கியங்கள் காணப்படுகின்றன. இதுவும் மூலவிருத்தமாயிராநின்றது: "விதுராந்நாநி புபுஜே" இத்யாதி ச்லோகம் முந்தினதாகவும் "த்விஷதந்நம் நபோக்தவ்யம்" இத்யாதி ச்லோகம் பிந்தினதாகவுமன்றோ தேசிகனால் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. மூலத்தில் அங்ஙனில்லை. உத்யோக பர்வத்தில் தொண்ணூற்றொராவது அத்யாயத்தில் இருபத்தேழாவது ச்லோகமாக "த்விஷதந்நம்" என்னும் ச்லோகமும், நாற்பத்தைந்தாவது ச்லோகமாக "விதுராந்நாநி புபுஜே" என்னும் ச்லோகமும் அச்சுப் புத்தகத்திற் காண்கிறது. "பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய" என்கிற ஸுப்ரஸித்தமான ச்லோகம் இந்த ப்ரகரணத்தில் அடியோடு காணப்படவில்லை. விதுரருடைய அடிசிலைக் கண்ணபிரான் அமுது செய்தபிறகு அப்பிரானை துர்யோதநன் அதிக்ஷேபித்துக் கேட்பதாக தேசிகன் முதலிய நம்மவர்கள் அருளிச் செய்திருக்கிறபடிக் கிணங்க இப்போதைய மஹாபாரதத்தில் ச்லோகங்களின் ஆநுபூர்வி அமைந்திருக்கவில்லை.

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் நாம் ஆராயப் புகுங்கால் மூலக்ரந்தங்கள் எல்லை கடந்த விகாரத்தை அடைந்திட்டனவாக அறுதியிடுதல் இன்றியமையாததாகின்றது. மற்றுள்ள புராணங்களிலும் ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும் நுழைந்து பார்த்தாலோ, அவற்றிலுள்ள விபர்யாஸங்கள் பேச்சுக்கு நிலமல்ல. அந்தணர் நூலாயும் மூலப்ரமாணமாயுமுள்ள வேதங்களின் உபப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணாதிகளைப் பரிஷ்காரப்படுத்துதல் நமக்கு முக்கியமான கைங்கரியமல்லவா? இவ் விஷயந்தன்னை முக்கியமாகக் குறிக்கொள்வாருண்டா?

ஸ்ரீ வைஷ்ணவதாஸன்,

காஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியன்.

ஸ்ரீ:

க்ருஷ்ணதேவராயர்.

வித்வான் ஸ்ரீ உப. வே. மு. ராகவையங்கார் ஸ்வாமியால் அருமையாக ஆராய்ந்தெழுதப்பட்ட 'தமிழரும் ஆந்த்ரரும்' என்னும் புஸ்தகம் ஸமீபத்தில் வெளிவந்திருக்கிறது. அதில் விஜயநகர வேந்தரும் விஷ்ணுபக்தருமான க்ருஷ்ணதேவராயரைப் பற்றிக் குறிக்கப்பட்ட சில விஷயங்கள் நமது பத்ரிகை நேயர்களுக்கு மகிழ்ச்சியைச் செய்யுமென்று கருதி இங்கே ஸங்க்ரஹித்து எழுதப்படுகின்றன.

விஜய நகரத்தைப் பரிபாலித்துவந்த வேந்தர்கள் பலருள்ளும் ப்ரபலமுற்றிருந்தவர் க்ருஷ்ணதேவராயரேயாவர். அவர் கிபி, 1509 முதல் 1529 ஹூ வரை அரசாண்டனர். அப்பொழுது விஜயநகரராஜ்யம் ஆந்த்ர கன்னட தேசங்களிலும் தமிழ் நாட்டிலும் வ்யாபித்திருந்தது. அவருடைய ஆளுகையில் ஜனங்கள் எல்லாநன்மையையும் அடைந்து சுகமாக வாழ்ந்தனர். அவர் ஒரு சிறந்த புலவரும் போர்வீரருமாக விளங்கினவர்; உயர்ந்த கொடையாளியாக மிகுந்த புகழ்படைத்தவர்; அநேக வித்வான்களையும் ஆதரித்தவர்.

தேவாலயங்கள் பலவற்றைச் சரிவரப்பாதுகாத்து அபிவிர்த்தியும் செய்தவர். இன்னும் அவருடைய அருமைபெருமைகளையெல்லாம் சரித்திர ஆசிரியர்கள் நன்ருக எழுதிவைத்திருக்கும் குறிப்புகளாலறியலாம்.

அவர் அரசியல்முறையாற் பொதுநோக்கமுடையவராயினும் சமயக்கொள்கையில் தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தைத் தழுவியவராக அறியப்படுகிருர். அவருக்கு ஆசார்யர் இன்னாரென்பதற்குத் தெளிவான ஆதாரமில்லையென்றும், ஆனால், அவர் பின்னோர் காஞ்சீபுரம் ஸ்ரீதாததேசிகன் திருவடிஸம்பந்திகளென்பதற்கு ப்ரமாணங்களுண்டென்றும் கூறுவர். அது நிற்க.

தமிழில், ஹரிதாஸரென்பவரால் இயற்றப்பெற்ற, இருசமய விளக்கம் என்னும் ஒரு க்ரந்தமிருப்பது எல்லார்க்கும் தெரிந்த விஷயமே. அது சைவவைஷ்ணவ வாதங்களைப்பற்றிக் கூறுகின்றது. அதன் பாயிரத்தில் அந்நூலாசிரியர் உபகாரஸ்ம்ருதியாக இந்த க்ருஷ்ணதேவராயரைப்பற்றி ப்ரஸ்தாபித்திருக்கிருர். அச்செய்யுள் வருமாறு:—

கிரிபோல்விளங்கிக்கிளரும்புயக்கிட்ணராயர்
தரைமீதுசிங்காத்திரியில்சயத்தம்பநாட்ட
வரம்ஆதரவால்அளித்தேவடகூவம்மேவும்
கருமாமணிவண்ணனைநீடுகருத்தில்வைப்பாம்.

க்ருஷ்ண தேவராயர் பரராஜாக்களை ஜயித்து ஸிம்ஹாத்ரியில் ஜயஸ்தம்பம் நாட்டுவதற்கு வரமளித்து வடகூபம் என்னும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை த்யானிப்போமாக: என்பது அதன் பொருள்.

அதனால், ஹரிதாஸர் க்ருஷ்ணதேவராயரால் அபிமானிக்கப் பெற்றவரென்பது நன்குவிளங்கும். ஸிம்ஹாசலத்தில் ஜயஸ்தம்ப நாட்டுவதற்கு க்ருஷ்ணதேவராயர் பெருமாளுடைய அநுக்ரஹத்தைப் பெற்றிருந்தாரென்பது அவருடைய தீவ்ரமான பக்தியைக் காட்டுகிறது.

அதுவன்றியும் ஸிம்ஹாத்திரித் திருமாலிடம் க்ருஷ்ணதேவராயர் பெரும்பக்தி கொண்டிருந்தாரென்று அறியப்படுகிறது. சகஸு 1438-1441ல் அவர் அநேக ஊர்களும் திருவாபரணங்

களும் அப்பெருமாளுக்கு அளித்தனரென்று ஸாசனங்கள் ஸிம்ஹாசலக்கோயிலில் காணப்படுகின்றன.

அவையெல்லாம் ஒருபுறமிருக்க; அவர் பெருங்கல்விமானாக வும் சிறந்த கவியாதவும் விளங்கினர் என்பதற்கு நிதர்சனமாக ஒரு முக்யமான விஷயத்தை இங்கே குறிப்பிடுதல்தகும். ஆந்த்ரபாஷையில் 'ஆமுக்தமால்யதா' என்னும் அருமையான க்ரந்தம் இவரால் இயற்றப்பெற்றுள்ளதெனின் அது நமக்கு வியப்பைத்தருமென்பது சொல்லவும் வேண்டுமோ? பெரியாழ்வார் பெண்பிள்ளையான ஸ்ரீ ஆண்டாள் விஷயமான ஸ்தோத்ரங்களே அதில் அமைந்துள்ளனவாகும். சூடிக்கொடுத்தாள் என்பதே 'ஆமுக்தமால்யதா' என்பதன் பொருள். அதிலுள்ள சொற்செறிவு பொருளமைதிகளைப் பற்றி ஆந்த்ர அறிஞர் பலரும்புகழ்ந்து பாராட்டுகிறார்கள். ஸ்ரீஆண்டாள் திவ்ய ஸூக்திகளின் அருமைபெருமைகளும், தமிழ நாட்டின்சிறப்புகளும், நம்மாழ்வார், ஆளவந்தார், உடையவர், வேதாந்ததேசிகர் மணவாளமாமுனிகள், அஹோபிலம்ஜீயர் என்ற ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியர்களின் அவதார மஹிமைகளும் அந்த க்ரந்தத்தில் அழகாகக் கூறப்பட்டுள்ளனவென்று தெரிகிறது.

இதுவரையிலும் சொல்லிய விஷயங்களால், க்ருஷ்ணதேவ ராயரென்னும் அரசர்பெருமான் ஒருசிறந்த வைஷ்ணவாபிமானியென்பதும், அவர்தாமே கவியாக இருந்ததோடுங்கூட பலகவி சிரேஷ்டரை ஆதரித்துவந்தாரென்பதும், திவ்யப்ரபந்த முதலான ஸம்ப்ரதாய சாஸ்த்ரங்களில் அவருக்குமிகுதியும் ஈடுபாடுண்டென்பதும், த்ராவிட பாஷையை அதிகமாக கௌரவித்தவர்களில் அவர் ஒருவரென்பதும் பிறவும் ஒருவாறு விளங்குவனவாம்.

T. N. அப்பனையங்கார்,

மதுரை.

ஸ்ரீ:

வேதாந்த தத்வ விளக்க வினாவிடை.

வினா:- சித்தும், அசித்தும், ஈசுவரனும் கூடிக்கொண்டு ஒன்றுயிருக்கிறதென்று சொல்லுகிற வேதாந்தங்கள் எவை?

விடை:-"தத் யதா ரதஸ்யாரேஷு நேமிரர்ப்பிதா நாபாவாரா அர்ப்பிதா, எவமேவைதா பூதமாத்ரா: ப்ரஜ்ஞாமாத்ராஸ்வர்பிதா: ப்ரஜ்ஞா மாத்ரார்பிதா:" என்றும் "ஆரா இவ ரதாநாபௌ ப்ராணே ஸர்வம் ப்ரதிஷ்டிதம்" என்றும் ரதசக்ரமத்யஸ்த குடம்போலே பரமாத்மா அந்தக் குடத்தை ஆரக்கால்கள் ஆசிரயித்திருப்பதைப்போல பரமாத்மாவை ஜீவாத்மாக்கள் ஆசிரயித்துள்ளன. ஆரக்கால்களைச் சக்ரவட்டம் ஆசிரயித்திருப்பதைப்போல ஜீவாத்மாக்களை ப்ரக்ருதி மண்டலம் ஆசிரயித்திருக்கின்றன என்பதாம். "மயி ப்ரோதமிதம் ஸர்வம் ஸூத்ரே மணிகணா இவ" என்பதுபோல இது ஏகதேச ஸாம்யம். "யதா ஹி கதளீ நாந்யத்வக் பத்ராந்நாத ஜாயதே எவம் விச்வஸ்ய நாந்ய ஸ்த்வம் த்வம்சா பீச்வர த்ருச்யதே" என்று வாழைத்தண்டை பட்டைகளும் பட்டைகளை இலைகளும் ஆசிரயித்து ஒன்றுயிருப்பதைப்போல் பரமாத்மாவை ஜீவாத்மாக்களும், ஜீவாத்மாவை ப்ரக்ருதியும் ஆசிரயித்து ஒன்றுயிருக்கிறதென்று சொல்லியிருப்பதுமாம்.

வினா:- முமுக்ஷுவுக்கு முக்யமாக அறியவேண்டியது என்ன?

விடை:-ஸ்வஸ்வரூப, பரஸ்வரூப, புருஷார்த்த ஸ்வரூப உபாய ஸ்வரூப, விரோதிஸ்வரூபம் என்ற சகலவேத ஸாரமான அர்த்த பஞ்சகமாம்.

வினா:- ஸ்வஸ்வரூபமாவது யாது?

விடை:-ஸ்வஸ்வரூபம் என்பது ஆத்மாவாம்.

வினா:- ஆத்மாக்கள், காணப்படுகிற தேகங்களா? அல்லது தேகங்களைக் காட்டிலும் வேறானவைகளா?

விடை:-தேகங்களைக் காட்டிலும் வேறானவைகளென்றே சொல்லவேண்டும்.

308

வினா:- தேகமே ஆத்மாவென்று சொன்னால் வருகிற குற்றம் என்ன?

விடை:- தேகம் அநேக அவயவங்களோடு கூடியதாகையால் அநேக ஆத்மாக்களை அங்கீகரிக்கவேண்டியதாய் வரும்; அப்பொழுது அவயவங்களுக்கு அந்யோந்யம் விவாதமில்லாமையும், அவற்றில் என்னுடையது என்கிற மமதா புத்தியும், மமதா வ்யவஹாரமும் கூடாது. ஓரவயவத்துக்கே சைதந்யங் கொள்ளில் அந்த அவயவம் வெட்டுப்பட்டதாகில் வேறோர் அவயவம் அநுபவித்ததை ஸ்மரிக்கக் கூடாது. மேலும் நான் என்கிற புத்தியும், நான் என்கிற வ்யவஹாரமும், என்னுடையது என்கிற புத்தியும் என்னுடையது என்கிற வ்யவஹாரமும் தவிர வேணும். சரீர முழுதும் வ்யாபித்திருக்கும் ஸுக துக்காநுபவமும் கூடாது. அவயவ ஸமூஹாத்மகமன்று சரீரம் அவயவி அதிலே சைதன்ய ஸ்வரூபமான ஆத்மா இருக்கிறது; என்னவொண்ணாது. அப்படியிருக்கிறதாக ப்ரமாணமும், அதை ஒத்துக்கொள்ளாவிட்டால் விரோதமும் இல்லாமையாலே அவயவியை அங்கீகரிப்பது அநுகூலமல்ல. மேலும் பால தேகத்தையுடைய நான் மந்தபுத்தி யுடையவனாயிருக்கிறேன்; யௌவன தேகத்தையுடைய நான் பஹுபுத்தி யுடையவனாயிருக்கிறேன்; என்பதும், என்னுடைய சரீரம் என்று சரீரத்திலும் ஆத்மாவிலும் பிறக்கிற பேதபுத்தியும், பேத வ்யவஹாரமுங் கூடாது. என்னுடைய ஆத்மா என்கிற விடத்திற்போலே அமுக்யமென்று சொல்லக் கூடாது, முக்ய பாதகமில்லாமையால். அன்றிக்கே நான் என்பதற்கு சரீரமே விஷயமாகக் கொண்டாலும் சுருதியாலும் சுருத்யர்த்தாபத்திகளாலும் தேகத்தைக் காட்டிலும் வேறாய் தேகாந்தரங்களைப் பரிக்ரஹிக்கிறதற்கு யோக்யமான ஆத்மா வேறுண்டென்பது ஸித்தம்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீ அகோபில மடம் 41-வது பட்டம்

ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம திவ்ய பாதுகா சேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்ம சடகோப யதீந்திர மஹாதேசிகர்

* சரணாகதிப் பதிகம்.

கட்டளைக் கலித்துறை.

சீர்வண் சடகோபச் சீர்நர சிம்ம யதீந்திரனே
சோர்வின்றி யுன்றன் றுணையடித் தொண்டு துணிந்தவெனைத்
தார்கொள் ஹிரணியற் கொன்றவன் யாலற்குத் தஞ்சமீந்தான்
காரொன்று மேனிக் கருணை காண்கழல் காத்திடுமே. ௧

காரைக் குறிச்சிசெய் மாதவங் கண்டாங் கவதரித்தே
பாரைப் புரக்கும் பலகலைப் பண்டித பார்த்திபனைச்
சீரைப் பெறுவிசிஷ் டாத்வைத மார்க்கஞ் செழிக்கவந்த
சாரத் திருநர சிம்ம சடகோபர்த் தாழ்ந்தனனே. ௨

என்னையும் என்குணக் கேட்டையும் பார்த்தரு ளீந்துநின்ற
நின்னரு ளிந்த நிலத்தினி லென்றும் நிலவிடுமால்
பொன்னவ னகத்தைப் பொழிந்தருள் காரணர் போற்றுகின்ற
என்நர சிம்ம சடகோபர் தாள்முடி யேற்றனனே. ௩

புண்ணிய நோன்பு புரிந்துமி லேன்பதம் போற்றுகின்ற
நுண்ணருங் கேள்வி நுவன்றில னென்சிந்தை நோக்கியிருந்
தெண்ணரும் பாவங் களைகிடக் கண்ணா ணிணையடியென்
சென்னியிற் சூட அருள்நர சிம்மன் அடைக்கலமே, ௪

---

* இது அகோபிலமடம் சிஷ்யரும் புதுக்கோட்டை ஸமஸ்தானம் மகாராஜா கலாசாலைத் தமிழ் வித்வானுமாகிய ஸ்ரீமத். வி. தி. ஸ்ரீநிவாஸய்யங்காரால் இயற்றப்பட்டது.

நாதமும் சோதியு மாய்நின்ற நாரணன் நாதனென்றே
போதமு றுத்தொண்டர் பேதமை போக்கிடப் போந்தருள்நா
ஓதிடு வண்சட கோப நரசிம்ம யோகிமலர்ப்
பாதம லாற்படு பாவிக்கி யாதொன்றும் பற்றிலையே. ௫.

ஆடிப் பலபிறப் பும்பிறந் தந்தமில் லல்லலற்றுத்
தேடித் திரிந்தனன் உய்வழி யொன்றும் தெரிந்திலனாய்
வாடிக் கடைசியில் கண்டு களித்து வணங்கிநின்றேன்
பாடித் திருநர சிம்ம சடகோபர் பாதங்களே. ௬.

சிந்தைநின் தாளிணை தாழ்ந்துநல் லன்பு சிறந்திடவே
விந்தைசே ருன்குணத் தீடுபட் டின்ப மிசைந்திடுமால்
முந்தை வினைகளும் பேர்ந்திட நாவு முழக்கிடுமால்
எந்தை நரசிம்ம வண்சட கோபன் இசையருளே. ௭.

வண்சட கோப நரசிம்ம யோகியர் மாதலைவ
கண்சட கோபர் பனுவலும் கண்ணன் கழலிணையும்
எண்சத வைகுந்த நாடுமெவ் வாறுனக் கின்பளிக்கும்
ஒண்சர ணங்களும் அத்தனைத் தேசரண் உற்றவெற்கே. ௮.

பத்தியும் யோகமும் பண்ணப் பதம்பெறுப் பாவமுற்றே
எத்திசை யும்புகல் பெற்றிலாக் காகம் எனவடைந்தேன்
சித்திகொள் சீரங்க நாத சடகோப தேசிகனால்
சத்திகொள் வண்சட கோப நரசிம்மர் தாண்மலரே ௯.

கூட்டும் விதியென்று கூடுங்கொ லோவெனக் கூறிநின்றேன்
நாட்டங்கண் டின்பம் பெறஅடைந் தேன்சரண் நானிலத்தோர்
வீட்டக ஞானந் தலைக்கொண்டு நாரணன் மேவநல்லோர்
ஈட்டங்கள் சூழ வருநர சிம்மர் இணையடியே. ௰.

இலக்குமி சேர்நர சிம்ம சடகோப தேசிகர்தாள்
இலக்கிய மென்றுவில் லூர்ச்சேனி வாசனெனுஞ் சருமன்
விளக்கிய பாச்சர ணாகதி பத்தும் விளம்பிடுவார்
துளக்கமில் நற்குரு தாள்மூலஞ் சேர்வர் துளவனையே. ௧௧.

ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம சடகோப யதீந்திர
மகா தேசிகர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ ஸமய தர்ம அபிவிர்த்தி ஸங்கம்.

இச் சங்கம் சமீபகாலத்திற் முன் திருநெல்வேலியில் ஸ்தாபிக்கப் பெற்றது; இது ஸ்ரீமாந். S. V கள்ளப்பிரான் பிள்ளையவர்கள் ரிட்டயார்டு டிப்டிகலெக்டர் அக்ராஸநாதிபத்யத்தில் நடைபெற்று வருகிறது. 100 ரூபாய் கொடுப்பவர்கள் விசேஷ அங்கததினர்களாகவும், 25 ரூபாய் கொடுப்பவர்கள் சாதாரண அங்கத்தினர்களாகவும், வருஷம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கொடுப்பவர்கள் அபிமானிகளாகவும் சேர்த்துக்கொள்ளப் பெறுவார்கள் என்பது இச்சங்கத்தின் அபிப்பிராயங்களாம். இதன் நோக்கங்களாவன:-இதுவரை அச்சிடப்பெறாத ஸம்ப்ரதாய விஷயங்களைப்பற்றிய அரிய ஏட்டுப்பிரிதிகளை அச்சிட்டு உரியவிலைக்குக் கொடுக்கவேண்டுமென்பதும், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் நாடெங்கும் பரவ பல அறிஞர்களைக்கொண்டு உபந்யஸிக்கச் செய்வதோடு அரிய பல விஷயங்களைத் துண்டுப்பத்திரிகை மூலமாக ப்ரசுரிக்கவேண்டுமென்பதும், பொருளுணர்தற் கரிதாயிருக்கின்ற மணிப்பிரவாளநடைக் கிரந்தங்களை யாவரும் எளிதிற் பொருளுணரும்படி எளிய தமிழ்நடையில் எழுதி அச்சிடவேண்டுமென்பதும் பிறவுமாம்.

இத்தகைய சங்கங்களை ஆஸ்திகாபிமானிகள் பலரும் பலவூர்களிலும் ஆதரிப்பார்களாகில் நமது ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமானது மேன்மேலும் விர்த்தியாகும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

ஸ்ரீ:

சென்னை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த சபையின்

14-வது வார்ஷிக மஹாஸங்கம்.

இச் சங்கம் நாளது ஹு மார்கழிமீ 15, 16, 17 (டிசம்பர்மீ 29, 30, 31) உகளில் கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ. உ. வே வ. வே. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி B A. B. L ஹைக்கோர்ட்டு ஜட்ஜி அக்ராஸநராக இம் மதுரைமாநகரில் சேதுபதி ஹைஸ்கூலில் நடைபெறும். அப்பொழுது பல சிறந்த வித்வான்கள் அரிய பெரிய விஷயங்களைப் பற்றி உபந்யஸிப்பார்கள். ஆஸ்திகரெல்லோரும் வந்து கேட்டுப் பயனடைவார்களாக. ஸபை நிகழ்ச்சி விபரம் பின்வருமாறு.

312

15உ (29—12—24) திங்கட்கிழமை.

மணி	விஷயம்	உபந்யசிப்பவர் பெயர்.
காலை 9—0 9-30	ஸத்கார ஸபையோரின் ஸ்வாகத நிவேதனம்	... ...
9-30 10—0	அக்ராஸனாதிபதியின் உபந்யாஸம்.	... ...
10—0 10-45	மதுரையும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமும்	ஸ்ரீ உ. வே பண்டிதபூஷணம் பகவத்விஷயம் சேட்டலூர் நரஸிம்ஹமாசார்ய ஸ்வாமி.
மாலை 2—0 2-30	அநுதாபத்தீர்மானமும்	... ...
	ஹிந்துமதஸ்தாபன மசோதாவைப்பற்றிய தீர்மானமும்.	... ...
2-30 3-15	பாஞ்சராத்ர ப்ராமாண்யம்.	இஞ்சிமேடு ஸ்ரீ. உ. வே. ரங்கநாதாசார்ய ஸ்வாமி.
3-15 4—0	ஜீவாத்மா தேஹமாயும் பரமாத்மா அந்தர்யாமியாகவுமிருக்குப் தத்வமும் அதின் பிரயோஜனங்களும்.	கொடைவாசல் ஸ்ரீ. உ. வே. நரசிம்ஹாசார்யஸ்வாமி
4—0 5-15	நம்மாழ்வாரிடம் கம்பருடைய ஈடுபாடு.	ஸேது ஸம்ஸ்தான வித்வான், ஸ்ரீ. உ. வே. ரா. ராகவையங்கார் ஸ்வாமி.

16வ (30—12—24) செவ்வாய்க்கிழமை.

மணி	விஷயம்	உபந்யஸிப்பவர் பெயர்.
காலை 8—0 8–45	அங்கத்தினர்களின் வார்ஷிகக் கூட்டம். Business meeting of the members.	... ...
	கர்மங்களின் புண்ய பாவங்களும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமும்.	ஸ்ரீ. உ. வே. ரகுபதி ஆசார்ய ஸ்வாமி.
9–30 10–15	ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் ஸார்வஜன ஹிதத்வம்.	ஸ்ரீ. உ. வே. ஸாதுராமாநுஜாசார்ய ஸ்வாமி.
10–15 11—0	சங்கர ராமாநுஜ பாஷ்யங்கள்.	ஸ்ரீ. உ. வே. மஹாமஹோபாத்யாயர் கவிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி
மாலை 2—0 2–30	ஷ ஸபை வேதாந்ததீபிகை இவைகளின் அபிவிருத்தியைப் பற்றிய தீர்மானம்	... ...
2–30 3–15	ஸ்ரீவைஷ்ணவர்களும் இதர தேவதைகளும்.	ஸ்ரீ. உ. வே. வேங்கடேசாசார்ய ஸ்வாமி.
3–15 4—0	ஸ்ரீவைஷ்ணவர்களின் ஐகபத்ய ஆவச்யகதை.	ஸ்ரீ. உ. வே. தி. ர. சடகோபாசார்ய ஸ்வாமி BA BL
4—0 4–45	உபயவேதாந்த ஐககண்ட்யம்.	ஸ்ரீ. உ. வே. தேசிகவாதாசார்ய ஸ்வாமி.

314

17வ (31—12—24) புதன்கிழமை.

மணி	விஷயம்	உபந்யஸிப்பவர் பெயர்.
காலை 8—0 8-45	ஆழ்வார்களும், அர்ச்சாவதாரமும்.	ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி
8-45 9-30	ஸாத்விகத்யாகம்.	ஸ்ரீ. உ. வே. தில்லியம்பூர் சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி.
9-30 10-15	ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் அநாதி	ஸ்ரீ. உ. வே. வங்கீபுரம் நவநீத கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி.
10-15 11—0	ஸமாச்ரயணம்.	ஸ்ரீ. உ. வே. வடபத்ரசாயி அய்யங்கார் ஸ்வாமி.
மாலை 2—0 2-30	நமது ஸித்தாந்தம் விருத்தி யடைவதைப் பற்றிய தீர்மானம்.	... ...
2-30 3-15	தசாவதார ரஹஸ்யம்.	ஸ்ரீ. உ. வே. V. கோபாலாசார்ய ஸ்வாமி M A.B.L.
3-15 4—0	ஸ்ரீவைஷ்ணவர்களின் ஆஹ்நிகக்ருத்யங்கள்	ஸ்ரீ. உ. வே. ஸ்ரீ ஸத்வ தாதாசார்ய ஸ்வாமி.
4—0 4-30	ஸம்பாவனை.	... ...
4-30 5—0	அக்ராஸநாதிபதியின் முடிவுரை.	... ...
5—0 5-30	வந்தனமளித்தல்.	... ...

அதன்பிறகு அரசன் தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துச்சென்று பெண்மணியாகிய அவளைத் தன் கண்மணிபோலப் பேணி அவளுடன் ஆசைக்கடலில் அழுந்தினன். அது ஒருபுறமிருக்க; அஷ்டாங்க விமானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கூடலழகப்பெருமாள் ஸந்நிதியின் பக்கத்தில் அழகிய மாளிகையொன்று அமைத்து அவன் அங்கிருந்து எம்பெருமானை நாள்தோறும் இறைஞ்சுவானாயினன். ஊர்வசியும் அப்பெருமாளை ஆராதித்துத் தனது ஆடலாலும் பாடலாலும் அவனை உகப்பித்து வந்தாள். அவ்வாறே அவள் அங்கு சிலகாலம் கழித்து, பின்பு சாபத்தினின்றும் விடுபட்டுச் சுவர்க்கம் புகுந்தனள். ஸ்ரீய: பதியான ஸர்வேசுவரனுடைய அநுக்ரஹத்தால் புரூரவ சக்ரவர்த்தியும் பரமபதமடைந்தனன்.

இந்தப்ரகாரமாக அந்த நாராயணனுடைய திருநாமத்தின் வைபவத்தை நாரதமுனிவர் எனக்குச் சொல்லியருளினர். அதன் பெருமையை உணர்பவர் யாவரேயாயினும் அவர் ஸமஸ்த பாபங்களினின்றும் விடுபடுவர். பூர்வம் அஜாமிளன் என்போன் தன் இச்சையில்லாமலே பகவந்நாமத்தை உச்சரித்து அவனுடைய பாதாரவிந்தங்களை அடைந்தனனென்றால், அவனை மனமார வாழ்த்துபவர்களும் அவனிடம் இடைவிடாது அன்பு செலுத்துபவர்களும் அடையும்பேறு இன்னதென்று பேசவும் வேண்டுமோ? அவர்கள் செய்த தீவினைகள் யாவும் நல்வினைகளாக மாறிவிடும். அன்றியும் அவர்களே பிறவிப்பிணியை அறுத்து ப்ரஹ்மானந்தமும் அடையக்கடவர். இந்தப் புரூரவ-ஊர்வசிகளின் கதையினைக் கேட்டவர்களும், பிறரைக் கேட்பித்தவர்களும், அந்த ஊர்வசியும் புரூரவனும்போலவே ஸகல போகங்களையும் அனுபவித்து முடிவில் மோக்ஷத்தையும் பெறுவார்கள்.'' என்று இவ் வரலாறனைத்தும் சௌனகாதி முனிவர்களுக்கு வேதவ்யாஸர் சொல்லி முடித்தார்.

ஸ்ரீ:

மலயத்வஜன் முதலாயினோர் பூஜித்தல்.

அவர் மறுபடியும் அந்த முனிவர்களைப் பார்த்து, "திருமந்த்ரத்தின் பெருமையை உள்ளபடியறிந்த ஓ மஹரிஷிகளே! மதிகுலம் வாழவந்த மன்னவர் திலகனான புரூரவன் மரபின் புண்ணிய சரித்

திரம் மிகவும் அற்புதமானது; அதனை உங்களுக்குச் சொல்லுவேன்; கேட்பீர்களாக'' என்று கூறி அக்கதையை மேலே தொடர்ந்து சொல்லலானர்.

புரூரவ சக்ரவர்த்திக்கு இந்த்ரத்யும்னன் என்று ஒரு புத்திரனிருந்தான். அவன் உயர்குணங்களுக்குத்திற்கும் உறைவிடமாய்த் தன்னை ஒப்பாரும் மிக்காருமின்றி உலகுபுரந்து வந்தனன். மிகுந்த பராக்ரமசாலியான அவனுக்கு மலயத்வஜன் என்பான் மகனாகத் தோன்றினன்.—

ஆயமலயத்துவசநாமவழுதிக்குரிசில்
ஆயிரமொடெட்டுமுடிசேர்
தூயமலையுட்படுதராபதிகள்தெற்கிலுறை
சூரர்திசைஎட்டிலுறைவோர்
தேயமுழுதிற்குமெழுசேனைகள்பரப்பியெதிர்
சீறினவரைப்பொடிசெய்தே
போயவனிகட்டிவடமேருவரையிற்றனது
பேரெழுதிவைத்தபுகழோன்.

அந்த மலயத்வஜன் என்னும் பெயரையுடைய பாண்டியன் நிறைந்த செல்வமும் சிறந்த புகழும் படைத்தவன். அவனுடைய செங்கோல் செல்லாத தேசம் எங்குமேயில்லை. அஷ்ட திக்கிலும் ஆண்மையை நிறுவி, அவன் மேரு வரையிலும் தனது பெயரைப் பொறித்தனன். அங்ஙனம் அவன் வைத்த குறியை வானவரும் அறிந்தனரெனின் அவனுடைய புகழுக்கு ஓர் அளவும் உண்டோ? அது நிற்க.

அவன் மதுராபுரியை ராஜஸ்தானமாகக் கொண்டு, அகஸ்திய மஹாமுனிவரால் அபிமானிக்கப்பெற்று, அறிவிற் சிறந்தோர் அநேகருடன் சேர்ந்து ஆயிரம் ஸம்வத்சரம் அரசாட்சி செய்தான். அப்பொழுது ஒருநாள் முத்தமிழுளித்த வித்தகராகிய அத் தவசிரேஷ்டரை அவன் ஏகாந்தத்திலெய்தித் தனக்குக் 'காமகம்' என்னும் விமானத்தைக் கருணையுடன் அளித்தருளுமாறு வேண்டினன். அவரும் அதனை அவனுக்கு உவகையோடு கொடுத்தார்.

அந்த விமானம் மிகவும் விரைவாகச் செல்லு மியல்புடையது. அரசன் அதனைக் கைக்கொண்டு அதிதூரம் சென்றான். கங்கை கடலுடன் கலக்குமிடத்தில் தீர்த்தமாடித் திருமாலைப் பணிந்து,

317

பிறகு கயைக்குப்போய் மூழ்கி அங்குள்ள மாயவனையும் மனமார வணங்கினன். வேதியர்களோடும், முனிவர்களோடும், பாகவதர்களோடும் பலவகைப்பட்ட தானங்களைச் செய்தான். பின்னர் விமானத்தை வேகமாகச் செலுத்திப் பொழுது படவருமுன்னே மதுரை வந்து சேர்ந்தான். அன்றுதொட்டுத் தினந்தோறும் அவ்வாறு சென்று திரும்புவதே அவனுக்கு வழக்கமாகிவிட்டது.

ஒருகால் அவன் புறப்பட்டுச் செல்லுகையில் மதிதொடு குடுமி மாலிருஞ்சோலையில் அவன் விமான நிழல் தவறுதலாக விழுந்தது. உடனே அங்குள்ள விஷ்ணு பாரிஷதர்கள் தடை செய்ய அவ்விமானம் மேலே செல்லமாட்டாமல் நின்றுவிட்டது. அதுகண்ட அரசன் மெய்தளர்ந்து நின்ற எல்லைக்கண் எம்பெருமான் அசரீரியாக அவனுக்குச் சில உறுதிமொழி கூறினன். முகில் முழக்கம்போலும் கம்பீரமான இனிய குரலுடன் எழுந்த அவ் வார்த்தைகள், ஆகாசத்தினின்று துளிக்கின்ற அமுததாரைகள் போல அரசனுடைய செவிகளில் புகுந்தன.

'ஹே மலயத்வஜ மன்னவ! கேட்பாயாக; எல்லா நதிகளிலும் ஏற்றமானதும், நமது நூபுரத்தினின்று உத்பத்தியாவதுமான ஒரு புண்ய தீர்த்தம் இந்த ரிஷபாசலத்தின் மத்தியிலுள்ளது. கங்கை நதியே இங்கு அவ்வாறு வந்துளதென்பதை நீ அறியக் கடவாய். ஒருவன் கோடி ஜன்மத்தில் புரிந்த பாபங்களுளவாயினும், அந்நீரில் முழுகினல் அவை ஓடிவிடுவனவாகும். முன்பு த்ரிவிக்ரமாவதார காலத்தில் கமலாஸனன் நமது கால்களை விளக்கியதனலுண்டான அந்த நன்னீர் பின்பு ஆகாயகங்கை யென்றும், த்ரிபதகை யென்றும் அழைக்கப்பட்டுப் பூமியிலே ப்ரவஹித்தது. சிலம்பினின்றும் தோன்றினமையால் அதற்குச் சிலம்பாறென்று பெயராயிற்று. அது நம் ஆச்ரிதர்க்கு சகலபோகமும் தந்து நமக்கும் இன்பமளிக்கின்றது. சங்கரனும் தனக்கு மங்களமுண்டாதற்பொருட்டே அதனை ஜடையிலே தரித்துக் கொண்டனன். ஆதலால் நீயும் அப் புனலுட் குளித்து பாகவதோத்தமர்களோடு எம்மைப் பரவி வழிபடுவாயாக. தர்மராஜனல் ஆராதிக்கப்பட்டு, இந்த ஸோம விமான நிகேதனத்தில் எழுந்தருளியுள்ள நம்மைப் பார்த்திபரனேகர் பல காலமும் பணிந்து நன்மையுற்றுர்கள். அவ்வாறே நீயும் இவ் விடத்திலமர்ந்து, நம் அடியவர்களுக்கு அடித்தொண்டியற்றிவரு

வாயாக. அதனால் நீ எல்லாச் செல்வமும் எய்தி இன்புற்றுப் பின்னர் அழிவில்லாத வீடுபேறும் அடையக்கடவை!' என்று நாராயணன் நவின்றருளினன்.

அதுகேட்ட அரசன் நித்யதரித்திரன் நிதியைக்கண்டாற்போல அளவில்லாத அகமகிழ்ச்சி கொண்டான். எம்பெருமானுடைய ஆஜ்ஞையை சிரஸாவஹித்துத் திருச்சிலம்பாற்றில் மூழ்கினன். அவ்விடத்திலேயே வாஸமாயிருந்து, மாற்றற்ற பொன்னும் மாணிக்கமுங்கொண்டு அத் திருமாலுக்குப் பல திருப்பணிகளும் செய்தான். அங்கு அவனை ஸேவித்துக்கொண் டிருத்தலிலேயே காலமெல்லாம் கழிப்பவனாயினன்.

அப்பொழுது ஒருநாள் சுந்தரவாரிதி, சுந்தரபாகு, சௌமியநாயகன், பரமசாமி, மலையலங்காரன், தெய்வசிகாமணி என்பது முதலான பல திருநாமங்களையுடைய அப் பெருமான் மலையத்வஜனை நோக்கி, 'ஓ மன்னவர் பெரும! வைவைக்கரையில் மதுரையென்னும் திவ்யதேசத்தில் தெய்வத் தச்சனால் செய்யப்பட்டதான அழகிய அஷ்டாங்க விமானத்திலும் நாம் அகலாது வீற்றிருந்தருளுவோம். அவ்விடத்தும் நீ எமக்குப் பல கைங்கர்யங்கள் செய்யவேண்டும்:' என்று ஆஜ்ஞாபித்தான்.

உடனே அரசனும் அப் பணியைத் தலைமேற்கொண்டு அங்குச் சென்று அவனுகந்த கைங்கர்யங்களைச் செய்து, ஸ்ரீ கூடலழகப்பெருமாளுடைய திருவடி நிழலையே தஞ்சமாகப்பற்றி, தாய்போலத் தண்ணளியுடையனாய் உலகுபுரந்து வந்தான், அங்ஙனம் சில காலம் சென்றவாறே, தன் புத்ரனாகிய சந்த்ரகேதுவென்பானைச் சக்ரவர்த்தியாக நியமித்து, அவன் தவநிலையை மேற்கொண்டவனாய்ப் பிறகு பரமபதமும் அடைந்தனன்.

சந்த்ரகேதுவின் தவமே உருவெடுத்தாலென்ன அவனுக்கு ஒரு ஸத்புத்திரனுதித்தான். சோமசுந்தர பாண்டியனென்பது அவன் பெயர். அவனுந் தன் முன்னோர்போலவே அரசு செலுத்தித் திருமால் பக்தியிற் சிறந்தவனாய் விளங்கினன்.

அவன் மகப்பெறுதல் வேண்டி ரிஷபாசலத்தை மேவி அங்கே காய் கந்த முதலியவற்றையே உணவாகக்கொண்டு நெடுங்காலம் தவஞ்செய்தான். அதனால் எம்பெருமான் அவனுக்கு எதிர்ப்பட்டு இனிய

வார்த்தைகள் இயம்பியகாலையில், உமாபதியான சிவன் தன் தேவியோடும் அங்குவந்தடைந்தனன். அடைந்தவன் அளவில்லாத அன்போடு பகவானைப் பலவாறு ஸ்தோத்ரம் செய்து, தான் அவனை ஸேவித்துய்யுமாறு அங்கு வந்ததாகவும், தனக்கு க்ருபை செய்ய வேண்டுமென்றும் ப்ரார்த்தித்து நின்றான். உடனே அழகனும் அவனுக்கு அருள்புரிந்து, பின்னரும், அவன் விடைகொண்டு திரும்புகையில் சோமசுந்தர பாண்டியனைச் சுட்டிக்காட்டி, 'இம் மன்னவன் றனக்கு மகப்பேறுண்டாக மனம் பற்றுவையாயின் நீ எமக்கு அகங்குளிருமாறு அன்பு செய்தவனாவாய்' என்று திருவாய்மலர்ந்தருளினன்.

'அவ்வாறே ஆகுக' என்று அரனும் அதற்குடன்பட்டுத் தன் தேவியை நோக்கி, 'மாதராய்! நீ பாண்டியன் புதல்வியாய்ச்சென்று மூன்று முலையுடன் தோன்றுவாயாக.' என்று கட்டளையிட்டான். அவளும் அதற்கிசைந்து அவன் புத்திரியாய் அவதரித்தாள்.

அப்பொழுது அமரரும் முனிவரும் அலர்மழை தூவ, மன்னனுந் தேவியும் தம் கன்னியை நோக்கிக் களிகூர்ந்தவராயினர். தவப்பயனாகத் தோன்றின அவளுக்கு அவர்கள் தடாதகையென்று நாமகரணமுஞ் செய்தார்கள். அவள் உருவமும் பருவமும் அமைந்து, வளர்பிறைபோல நாள்தோறும் பெருகி, கலைகள் யாவும் நிறைந்து விளங்கினாள்.

அஃதவ்வாறிருக்க; சிவபெருமான் தன் தேவியான அக் கன்னிகையை மீண்டும் வந்து கண்டு, 'பெண்ணே! நின் தந்தையின் பின்னர் நீயே இப் பூமிமுழுவதும் புரந்தருளக் கடவாய். யாமும் விந்த்யப்ரதேசத்தில் வேடர்கோனொருவனால் வியந்து பூஜிக்கப்பட்டு அவனுடைய க்ருஹத்தில் அமர்ந்திருப்போம். நின் நால்வகைப் படையோடும் அங்கு வந்து நீ செருச்செய்து வென்றிமாலை புனையும்போது, யாம் உன்னுடன் போர்புரிய எழுந்து வருவோம். அவ்வமயம் நமது நோக்கத்தால் நினது தனங்களில் ஒன்று மறைந்து நீங்கிவிடுவதாகும். அதனால் நாணமுற்று, கயல்போலுங் கண்களையுடைய நீ எம்மைக் காதலனாக வரிப்பாய். மதுரையம் பதியில் யாம் உன்னை மணம்புணர வருவோம். பின்னர் எமது தோள்நலந்துய்த்து, உலகனைத்திற்கும் ஒரு தனியரசியாய்நீ காவலை நடாத்துவாய். சுந்தரபாண்டியனென்று யாவராலுந் துதிக்கப்படு

கிற நாம், இறுதியில், திருமாலிருஞ் சோலை சேர்ந்து பெருமாளுகந்த கைங்கர்யம் செய்துவருவோம். அன்றியும் அந்த க்ஷேத்ரத்தைப் பரிபாலிப்பதனால் க்ஷேத்ரபாலனென்று அழைக்கப்பட்டு அழகனுக்கு இடதுபக்கத்திலமர்ந்து, ஆச்ரிதர்களுக்கு எல்லா நன்மையும் எளிதில் கொடுப்போம்:' என்று இங்ஙனம் கூறிவிட்டுச் சென்றனன்.

இப்பால் தடாதகைப் பிராட்டியை முடிசூடுவித்துத் தந்தையும் வானுலக மெய்தினன். அரனுரைத்தன யாவும் அடைவே நிகழ்ந்தேறின. திருமாலிருஞ்சோலை எம்பெருமானையும், ஸ்ரீ கூடலழகப் பெருமானையும் போற்றித் தடாதகைப் பிராட்டியும் தன் காலத்தைக் கழிப்பவளாயினள்:'' என்று இவை முழுவதும் வ்யாசர் ரிஷிகளுக்குச் சொல்லி, மீண்டும் அத் திருமாலருளின் சரிதையைத் தான் வினவியறிந்தவாறே, அவர்களுக்கு வெளியிடுவதாக உரைத்தனர்.

ஸ்ரீ:

பட்டர்பிரான் மதுரையை அடைதல்.

பாண்டியகுலத்திற் பார்த்திபர்களுள்ளே ஸ்ரீவல்லபன் என்று ஒருவன் தோன்றினன்.

உலகம்யாவும்உவப்பவன்செஞ்சொலான்
பலர்மனங்கவர்பண்பினன்நண்பினன்
நிலவும்ஆழமுடையநிலைமையான்
இலகுமாநகர்எத்தும்சதுரனே.

தீரன்பின்செயல்முன்சொலும்சீர்த்தியான்
யாரும்தூயரும்தன்னிடத்தெய்துவோன்
சாரும்பல்லுயிர்க்கேற்பன தான்செய்வோன்
ஒரும்வேதவேதாங்கம்உணர்ந்துளோன்.

வள்ளியோன்பெருந்தெய்வம்வழுத்துவோன்
உள்ளதன்றிப்பிறர்மனைஉள்ளிடான்
தெள்ளிதென்றுந்திருமாலடித்துணை
அள்ளுமன்புளன்அவ்வியமில்லனே.

அந்த ஸ்ரீவல்லபதேவனென்பான் உலகமுவப்பத் தண்ணளிபுரிந்து செங்கோல் செலுத்தினன். ப்ரஜைகளுக்கெல்லாம் ஹிதத்தையே நாடினன். எல்லாரிடத்திலும் இனிய வார்த்தைகளே பேசி, பலரையும் மனங்கவரும் பண்பு வாய்ந்திருந்தனன். அவன் நீதிநூற் கடலை நிலைகண்டுணர்ந்து, வேதவேதாங்கமும் விளங்கக் கற்றவன்; ஆழ்ந்த அறிவும் அமைந்த செய்கையும் உடையவன்; நல்லொழுக்கத்தினால் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவன்; பகவத் பக்தியும் பாகவத பக்தியும் நிறைந்து திருமாலடியையே தஞ்சமாகப் பற்றியிருப்பவன். அன்றியும், அவன் மிகுந்த பராக்ரமசாலியாய்த் தீவ்ரமான வ்ரதானுஷ்டானங்களுடையவனாகவும், ஸத்யம், தயை, ஸாந்தம் முதலான ஸத்குணங்களமைந்தவனாகவும், சிறந்த தார்மிகனாகவும், பரோபகாரனாய் வித்வான்களையும் வேதியர்களையும் ஆராதிப்பவனாகவும் இருந்தான்.

அத்தகையனான அவ்வரசன், தன் ராஜதானியாய மதுரையில், ஒருநாள் நள்ளிரவு நகர் சோதனையின்பொருட்டுப் புறப்பட்டான். புறப்பட்டவன் எவ்விடத்தில் யார் என்ன சொல்லுவார்களோ என்று தன் இரு செவிகளும் சாய்த்து, நிறைந்த தெருக்கள் தோறும் நின்று நின்று செல்லுவானாயினன். அப்பொழுது அவன், ஆங்குள்ள தேவாலயத்தினின்றும் வேதியனொருவன் வெளிப்பட்டு வருதல் கண்டு, அவனை எதிர்ப்பட்டு யாரென்று வினவினான். அதற்கு அம் மறைவலாளன், 'ஓ மன்னவர் பெரும! யான் கௌசிக கோத்திரத்தி லுதித்தவன்; என் பெயர் சோமசன்மா என்பது; யான் அவந்தியினின்று தீர்த்தயாத்ரையாகப் புறப்பட்டு, இன்று என் பவந்தொலையுமாறு உவந்து வந்து இம் மதுரையை உற்றனன்:' என்று மறுமொழி கூறினான்.

அதுகேட்ட அரசன் மீண்டும் அப் பார்ப்பனப் பெரியோனை நோக்கி, தனக்குப் பரம புருஷார்த்தத்தை அருளிச்செய்யுமாறு வேண்டினன். உடனே அவனும் மிகப் பழமையானதும், இதிஹாஸத்திற் பொருந்தினதும், உயர்ந்த பொருளுடையதுமான ஒரு சுலோகத்தை உரைத்தனன்.—

வருடநாள் வேண்டும்பண்டம் மற்றைஎண் மதியிற்கொள்க
இரவிடைவேண்டிற்றெல்லாம்எல்லொளிப்பகலேதேர்க
நரையுறுமூப்பிற்கேற்பது இளமையேநாடிச்சேர்க்க
பரகதிக்கேதுவாவது இம்மையிற்றேடற்பால.

மாரிக்காலத்துக்கு வேண்டும் பொருள்கள் கோடைக்காலத்தில் சேகரிக்கவேண்டும்; இரவுக்கு வேண்டுவன பகலில் சேர்க்கவேண்டும்; முதுமைக்கு வேண்டுவன இளமையிலே செய்துகொள்ளவேண்டும்; அவ்வாறே மறுமைக்கு வேண்டுவதும் இம்மையிலேயே தேடற்பாலது; என்னும் அர்த்தமுடைய அந்த சுலோகத்தை அரசன் ஓர் ஏட்டில் எழுதிக்கொண்டான்.

மறுநாட்காலையில் அவன் தன் ஆஸ்தான மண்டபத்தை அடைந்தனன். அமைச்சர்களை அங்கு வரவழைத்தான். அவர்களுடன் புரோஹிதரும் வந்தார்.

அவர் செல்வநம்பி என்னும் திருநாமமுடையவர். அரசன் வேண்டுகோளின்படி, ஓர் உயர்ந்த ஆஸனத்தின்மீது வேதவேதாங்க பாரங்கதரான அவர் வீற்றிருந்தருளினர். அப்பொழுது பாண்டியன் அவர் முன்பு தனக்குப் பரதத்வம் இன்னதென்று தெளிவிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தான். அந்தக்கரண சுத்தியுடைய ஆசார்யரும் மன்னவன் கேள்விக்கு மனமுவந்தவராயினர்.

அதன்பிறகு அவர், ஸகல சாஸ்த்ர ஸம்பந்நர்களான வித்வான்களும் வேதியர்களும் நிறைந்த மஹாஸபையில், தத்வங்களையும் அவற்றை அறியும் ஞானத்தையும், வேதாந்த விசாரம் செய்வோர் காணும் பலன் இன்னதென்பதையும், ஜீவகோடிகளுக்கு எதனால் பிறவிப்பிணி நீங்குமென்பதையும் தெளிவாக உரைக்குமாறு ஸகலர்க்கும் தெரிவித்தனர். உடனே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மதத்திற்கேற்ப நூல்களின் உண்மையை நுவலத் தொடங்கினர். ஆனால், அவை மெய்ப்பொருளன்றென்று அப்பொழுது ஓர் அசரீரி வாக்கு உண்டாயிற்று

மீண்டும் அவ் ஆகாயவாணி பாண்டியனைநோக்கி, 'வேந்தனே! நீ கிழியொன்றில் பொன்னைப் பொதிந்து வித்யாசுல்கமாகத் தூக்கிவை. நாம் அதில் ஸாந்நித்யமாயிருப்போம். வேதாந்த தத்வத்தை யாவனொருவன் வெளியிடுவானோ அவனுக்கே அந்தக்கிழி அடையக் கடவதாகும். அவன் மனதில் நாம் அந்தர்யாமியாயிருந்து உண்மையை உரைத்து அவன் அக்கிழியைப் பெறுமாறு செய்வோம்:' என்று கூறி அடங்கிற்று.

அதுகேட்ட அரசன் வியப்பும் களிப்பும் மேலிட்டவனாகிச் செல்வநம்பியைப் பார்த்து, 'அருமறை தெளிந்த அந்தணராகிய